# கிருபையுள்ள வார்த்தை

## KIRUBAIYULLA VAARTHAI

லூக் (LUKE) 4:22

Vol - 16 | December டிசம்பர் | 2015

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




அந்தமான் ஊழியப் பயணத்தின்போது ஆசிரியரால் எடுக்கப்பட்ட புகைப்படம்

கௌரவ ஆசிரியர் Betty Choate ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


நன்றி சொல்ல தடை செய்பவை 3

தேவ கிருபை 7

இயேசுவின் புதிய ஏற்பாடு 9

2 சாமுவேல்... 13

சிறுவர் பகுதி 15


*In memory of* **J.C. CHOATE**


*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,

சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

வாசகர்கள் கவனத்திற்கு...

**புதுயுகம் T.V. யில்**

செவ்வாய் காலை - 6.15 மணிக்கு கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு** காலை 6-45 மணி

பாருங்கள் ! பயன் அடையுங்கள் !


செய்தியாளர்கள்:

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)





## இலவசம் ! இலவசம் !

கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே! எமது புதிய வெளியீடான, நமது ஆசிரியரின் TV செய்திகள் அடங்கிய **"பிரசங்க குறிப்புகள்"** புத்தகத்தினை இலவச பரிசாக பெற்றுக் கொள்ள, உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் பதிவு எண்ணுடன் எங்களுக்கு ஒரு தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்! SMS மூலமாகவும் விபரங்களை எங்களுக்கு அனுப்பலாம்.

குறிப்பு : தபால் செலவு உங்களுடையது !


முந்தி வரும் தொடர்புகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் !

போன்
92 4421 4421, 924431 4431, 9791760010

**கிருபையுள்ள வார்த்தை**

**"நன்றி உணர்வை தூண்டும் இயேசு நாதரின் வார்த்தை"**


World Literature Publication
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.85

ஆசிரியர் உரை

# நன்றி சொல்ல தடை செய்பவை

**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர்
கிருபையுள்ள வார்த்தை



பிரியமானவர்களே ! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள். இந்த வருடம் முடிய இன்னும் சில நாட்களே மீதமிருக்கின்றன. நாம் அனைவரும் சர்வவல்ல பரலோக தேவனுக்கு நன்றி சொல்லவும், நன்றி செய்யவும் வேண்டுவது மிகவும் அவசியமானதால், அதைக் குறித்து இந்த மாதம் நாம் தியானம் செய்வோம்.

நன்றி சொல்லவும், நன்றி செய்யவும் கர்த்தருடைய வார்த்தைகள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. **1தெச 5:18** "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது." மற்றும் **கொலோ 3:17** "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்."

எப்பொழுதும், எல்லா சூழ்நிலைகளிலும் நன்றி கூறுங்கள் மற்றும் நன்றி செய்யுங்கள் (In everything give thanks to God) என நம்மை தூண்டுகிறது. **எபே5:20** "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து," மற்றும் **எபி13:15** "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்."




இந்த உலகில் நாம் நன்றி சொல்லாதவர்களாகவும், நன்றி செய்யாதவர்களாகவும் இருக்க காரணங்கள் குவிந்து கிடக்கின்றன. மேலும் நன்றி சொல்ல வேண்டியவை என்ற பட்டியலில் நாமாகவே சிலவற்றை, 'இதற்கெல்லாமா நன்றி சொல்வது?' 'இதற்கு மட்டும் நன்றி சொன்னால் போதும்' என்று பிரித்திருக்கிறோம். எனவே நன்றி செலுத்த (செய்ய, சொல்ல) நம்மை தடை செய்யும் தடுப்புகளை இந்த பாடத்தின் மூலம் உடைக்க முற்படுவோம்.

## I. சிந்தனையற்ற நிலை (Thoughtlessness)

நாம் உடைக்க வேண்டிய முதல் தடுக்கல் அல்லது தடைக்கல் சிந்தனையற்ற நிலை ஆகும்.

"சிந்தியுங்கள் மற்றும் நன்றி செய்து விடுங்கள்" (Think & Thank).



நாம் சிந்தித்து பார்க்க மறப்பதினாலேயே நன்றி செலுத்தவும் மறந்துவிடுகிறோம். பரலோக கடவுள் நமக்கு செய்தவைகளை அடிக்கடி சிந்திக்க, எண்ணிப்பார்க்க மறந்துவிடுகிறோம். அதினாலேயே நன்றி செலுத்த மறந்துவிடுகிறோம்.

பரலோக தேவன் நம்மீது அன்பும் கரிசனையும் உள்ளவர் என்று எண்ணிப்பார்க்க (சிந்திக்க) மறந்துவிடுகிறோம். சங்கீதங்களில் நிறைய சங்கீதங்கள், நன்றி பாடல்களே! வாசியுங்கள். **சங் 30:1–12. வசனம் 10–12ல்,** "கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்;க ர்த்தரைே நாக்கிக்ெ கஞ்சினேன்.எ ன்பு லம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இருட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்."

**கர்த்தருடைய ஊழியத்தை தாங்குவதின் மூலம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம் – லூக்கா 8:3**

மேலும் வாசியுங்கள் **சங் 103:1–5** மற்றும் **சங் 106:13.** தாவீது ஒவ்வொன்றாக எண்ணி, எண்ணி கணக்கில் எடுத்துக் கொண்டு நன்றி செலுத்துகிறார்.

நாம் எந்த வழிகளில் எல்லாம் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளோம்? உணவு, உடை, உறவு, மன்னிப்பு, மீட்பு, சத்தியத்தை (பைபிள்) பற்றிய அறிவு, பரலோக கடவுளின் கிருபை, இரக்கங்கள் இன்னும் பட்டியல் பல பக்கங்களுக்கு நீளும் என்பதில் ஆச்சரியமில்லை. ஆகையால் அவைகளை ஒவ்வொன்றாக எண்ணி, எண்ணி கணக்கில் எடுத்துக்கொண்டு தேவனுக்கு நன்றி செலுத்தக்கடவோம்.

அநேக வேளைகளில் பெரிய காரியங்களுக்கு நன்றி கூறும் நாம் சிறிய காரியங்களையும் எண்ணி நன்றி கூற வேண்டும். ஒரு மனநல மருத்துவமனையில், 15 வருடம் வேலைப்பார்த்த வேன் ஓட்டுனரிடம் ஒருவர் கேட்டாராம், 'கடவுள் உனக்கு தந்த ஆரோக்கியமான மனத்திற்காக (புத்திக்காக) என்றைக்காவது நன்றி சொன்னாயா?' என்று. ஆம்! நிறைய வேலைகளில் இவரைப் போலவே நாம், நன்றி செலுத்த வேண்டிய காரியங்களை சிந்திக்க மறந்துவிடுகிறோம்.

## II. விசுவாசமில்லாமை (Faithlessness)

நன்றி செலுத்த தடுக்கும் இரண்டாவது தடைக்கல் விசுவாசிக்க மறுத்தல் அல்லது விசுவாசமில்லாத தன்மை ஆகும். **ரோமர் 1:20–21** "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது."




தேவன் கொடுத்த நன்மையானவைகளை அனுபவித்தாலும், அதை தேவன் தான் கொடுத்தது என்று ஏற்க மறுப்பதும், அல்லது அதை நம்ப மறுப்பதும் நன்றி செலுத்த மிகப்பெரிய தடைக்கல் ஆகும். ஆயினும் பரலோக கடவுள் எல்லா வரமும் தருபவராக இருக்கிறார்.

**யாக் 1:17** "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." கடவுளுக்கு நன்றிக்கூற மறுப்பதும், அவரிடம் இருந்து பெற்றதை விசுவாசியாமலிருப்பதும் ஒன்றுதான்.

## III. திருப்தியற்ற நிலை (Discontentment)




நன்றி செலுத்த தடுக்கும் மூன்றாவது தடைக்கல் அதிருப்தி (திருப்தியற்ற) நிலை அல்லது மனநிறைவற்ற தன்மை ஆகும். ஆகையால் நமது மனநிறைவு நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பதற்கு, நன்றி செலுத்தும் முன்பாக நாம் திருப்தியை அல்லது மனநிறைவை அபிவிருத்தி செய்யவும், அதை நமக்கு நாமே உருவாக்கிக்கொள்ளவும் வேண்டும்.

**பிலி 4:11–12** "என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்."

வேத வசனங்கள் நமது மனநிறைவை வளர்க்க நம்மை ஊக்கப்படுத்துகின்றன. **1 தீமோ 6:6–8** "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு

**விதவைகளையும், திக்கற்றவர்களையும் விசாரியுங்கள் – யாக் 1:27**

போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்."

இன்றைய நாட்களில் அநேகர் நன்றி சொல்ல மனதில்லாதிருக்கும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அநேகர் நன்றி செலுத்த நினைக்கின்றனர், ஆனால் மனநிறைவு அல்லது திருப்தியற்றிருக்கின்றனர். நன்றி என்று சொல்வோரில் அநேகருக்கும், 'இன்னும் அதிகம் கிடைக்குமா?' கிடைத்தால், நல்லது என்ற மனநிலையே உள்ளது.

நன்றி என்று கூறினாலும், வேறொன்று கிடைத்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமே, என்ற மனநிலையில் இருக்கிறார்கள். ஒரு மோட்ச பிரயாணிக்கு இருக்கும் மனநிறைவை நாம் கொண்டிருக்க வேண்டும். விவசாயிகள் அறுப்பின் நாட்களுக்கு பிறகு நன்றி சொல்வார்களே தவிர, இந்த பயிரை விளைவிக்கப்பட்ட பாடுகளை எல்லாம் சுத்தமாக மறந்தேவிடுவர். விளைந்தவற்றை மட்டுமே எண்ணி மனநிறைவுக்கொள்வார்கள்.

## IV. சுயநலம் (Selfishness)

நன்றி செலுத்த நம்மை தடுக்கும் நான்காவது தடைக்கல் 'சுயநலம்' ஆகும்.



**மத் 18:33–35**

"நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்."

பல கோடி ரூபாய் கடனை அடைக்க பல ஆண்டுகள் உழைத்தாலும் சிரமப்பட வேண்டியவனை, அவன் முதலாளி மன்னித்து வாழ வைத்தான். ஆனால் மன்னிப்பு பெற்றவன், பெற்ற நன்மையை சிந்தித்துப் பார்த்து நன்றி நிறை மனம் இல்லாதவனாயிருந்த படியால், அவனிடம் சில நூறு கடன் பெற்றவனை சில ஆண்டுகள் தண்டனை பெற்றே ஆகவேண்டி சிறையில் போடுகிறான். காரணம், அவனது சுயநலம்.

இன்றைக்கும் கொலைகாரர்களும், வட்டிக்கு பணம் கொடுப்பதை தொழிலாக செய்யும் சில கிறிஸ்தவர்களும், தேவனுடைய மிகப்பெரிய தண்டனை நமக்குண்டு என்ற எண்ணமற்று போய், 'என் பணம், நான் பிழைக்க வேண்டுமே', தனக்கு மிஞ்சினது தான் தானமும் தருமமும் என்ற மனப்போக்குடனே வாழ்வதற்கு காரணம் சுயநலம் ஆகும்.

செய்ய வேண்டிய நன்றியை ஏன் செய்ய வேண்டும்? என்று எண்ணிப் பார்க்க மறக்கின்ற இவர்கள் சுயநலமானவர்களே! அப்படிப்பட்ட சுயநலமிக்கவர்கள் சொல்வது: 'ஏன் நன்றி சொல்ல வேண்டும்? நான் கஷ்டப்பட்டு, பாடுபட்டு சம்பாதித்தது இதற்குப்போய் கடவுளுக்கோ, மற்றவர்களுக்கோ ஏன் நன்றி சொல்ல வேண்டும்?' என்கிறார்கள்; அல்லது அந்த எண்ணமுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் சுயநலமிக்கவர்களே!

சிலர் மேலே சொன்னபடி நினைக்கவில்லை என்றாலும், நன்றி சொல்லும்படியான நினைப்பே வருவதேயில்லை. மேலும் சிலர், 'இதுக்கெல்லாமா?' 'சொந்தப் பந்தங்களிடமா?' 'நெருங்கியவர்களிடமுமா?' நன்றி சொல்வது என்று பேசுவது தவறாகும். இயேசு தன்னிடம் நன்றி சொல்ல வந்தவனிடம், 'மற்ற 9 பேர் எங்கே?' என்று கேட்டார்.

**ஏழைகளுக்கு உதவுவது இயேசுவுக்கே கொடுப்பதாகும் – மத் 25:40**


அப்படியானால் நாம் நன்றி சொல்ல வேண்டுமென கடவுள் எதிர்பார்க்கிறார் என்பதை நினைவில் கொள்வோம்.

எல்லாவற்றிலும் நன்றியறிதல் உள்ளவர்களாய் இருங்கள் என்று வேதம் கூறுகிறது. சிலர் கூறுவர் முழுவதும் வரவில்லையே, வரவேண்டியது எல்லாம் வரவில்லையே பிறகு ஏன் நன்றி சொல்ல வேண்டும்? என்பார்கள். இன்னும் சிலர், 'எனக்கு யார் உதவினார்கள்? நான் ஏன் உதவி செய்யனும்? நான் உதவியும் செய்யவில்லை, உபத்திரவமும் பண்ணவில்லை' என்று நினைப்பார்கள் இதுவெல்லாம் சுயநலமேயாகும்.

## V. புறக்கணிப்பு (Neglect)

நாம் உடைக்க வேண்டிய ஐந்தாவது தடைக்கல் புறக்கணிப்பு ஆகும்.

**லூக்கா 17:11–19** "...அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனைம கிமைப்படுத்தி,அ வருடையப ாதத்தருகேமு கங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான்; அவன் சமாரியனாயிருந்தான். அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக் காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி, நீ எழுந்துப்போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்."



நம்மில் அநேகமாய், எல்லாருக்கும் நன்றி உணர்வு உண்டு. ஆனால் அதை பல நேரங்களில் வெளிப்படுத்துவதில்லை. இங்கே 9 தொழு நோயாளிகளும் பாராட்டை (நன்றியை) வெளிப்படுத்த தவறிவிட்டனர். ஆனால் வெளிப்படுத்தி பாராட்ட வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

உதாரணமாக, நம் சிறு பிள்ளைகள், நாம் விரும்புவதை செய்துவிட்டால் 'தங்கமே, மானே, தேனே' என்று சொல்லி ஏன் கொஞ்சுகிறோம்? இது தான் பாராட்டுதலை வெளிப்படுத்துவதாகும். இதை நம் பிள்ளைகளுக்கும் சொல்லி பழக்கப்படுத்தி கொடுப்போம். முதலில் தேவனை, பிறகு பெற்றோரை, பிறகு மற்றவர்களை பாராட்ட பயிற்சி கொடுப்பதின் மூலமாக தான், அவர்கள் நன்றி செய்கிறவர்களாக மாறுவார்கள்; இல்லையெனில், புறக்கணிப்பு மூலம் தோல்வி அடைகிறவர்களாக மாறக்கூடும்.

மாம்பழத்தை ருசித்தால் தான் ருசி தெரியும், பூவை முகர்ந்தால் தான் வாசனை தெரியும்; அதுபோல நாமும் குறைந்தது, நேற்றுவரை நம் வாழ்வில் கடந்தவைகளுக்காக கடவுளுக்கும், தேவனுடைய வார்த்தைக்கும், பிறருக்கும், நம் உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் நன்றி செய்வோம்! மகிழ்ந்திருப்போம்!

## இறுதியாக...

நாம் தேவனுக்கு நன்றி செலுத்த தடைகளாக இருப்பவைகள் என்ன?

1. சிந்தனையற்ற தன்மையா?

2. விசுவாசமற்ற தன்மையா?

3. திருப்தியற்ற (மனநிறைவற்ற) தன்மையா?

4. சுயநலமா?


5. புறக்கணிப்பதால் தோல்வியா? என சிந்தித்து, எது நம்மை தடுக்கிறதோ அதை வேத வசனத்தினால் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்தலின்படி உடைத்து, நன்றியுள்ளவர்களாக வாழ்வோம்!

– அன்புடன், ஆசிரியர்

ஏழைகளுக்கு இரக்கம் செய்தல் கர்த்தருக்கே கடன் கொடுப்பதாகும். – நீதி 19 :17

## சத்திய வழி – வானொலி செய்திகள்

# தேவ கிருபை (God's Grace)



- சகோ. P.R. சாமி
(பெங்களூரு)

அன்புள்ள நண்பர்களுக்கு! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துக்கள். கிறிஸ்துவின் நற்செய்தியை உங்களோடு நான் பகிர்ந்துகொள்ள எனக்கு அருளப்பட்ட இந்த கிருபைக்காக தேவனை என்றென்றும் ஸ்தோத்திரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பக்தன் பாடி இருக்கிறான். "ஆச்சரியமான கிருபை" ! என்ன அருமையான ஒலி, "இந்த ஈனனையும் ரட்சித்த அந்தக் கிருபை !! நான் ஒரு தடவை காணாமற்போன நிலையிலிருந்தேன். இப்பொழுதோ கண்டு பிடிக்கப்பட்டேன். நான் முன்பு குருடனாக இருந்தேன். இப்பொழுதோ பார்வையடைந்தவனாக இருக்கிறேன்" என்றான். எரேமியா தீர்க்கதரிசியும், 'நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே' என்றார்.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறிய வார்த்தைகளைக் கேளுங்கள். "அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.நீ ங்களும்பி ரசங்கித்தபி ரகாரமாய்நீ ங்கள் அதைக் கைக்கொண்டு இருந்தால் அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின் படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு அகால பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார். நான் அப்போஸ்தரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையை துன்பப்படுத்தினதினாலே நான் அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்கும் பாத்திரன் அல்ல. ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன். அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது," **(1 கொரி. 15:1–10).**

இந்தப் பவுல் தான் சபையை துன்பப்படுத்தினவன். நல்மனச் சாட்சியோடே நேர்மையோடே இதைச் செய்தேன் என்றான். துன்பப்படுத்துவதைக் கர்த்தர் தடுத்து நிறுத்தினார். சபையை துன்பப்படுத்தியவனே, துன்பப்படுகிறவனாக மாறினான். தன் தவறை உணர்ந்து, சபையை கொடுமைப்படுத்துவதை விட்டு, கிறிஸ்தவனாக மாறி, கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பாடுபடுகிறவானாக மாறினான். ஆகவே தான், மற்ற அப்போஸ்தலர்களோடே தன்னை ஒப்பிட்டு, அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன். அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்கும் பாத்திரன் அல்ல என்று கூறுகிறான். பாவிகளில் பிரதான பாவி என்று தன்னை அழைத்துக்கொள்கிறான்.

1 கொரி. 15ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் கூறி விட்டு, அதற்கு பிறகு உயிர்த்தெழுந்த கிறிஸ்து எவ்வாறு மற்றவர்களுக்கு தரிசனமானார் என்று கூறிவிட்டு, கடைசியில் அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார் என்றார் பவுல். இந்த கட்டத்தில் தான் பவுல், நான் இருக்கிறது வேத கிருபையினாலே இருக்கிறேன். அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற **தேவ கிருபையே** அப்படிச்செய்தது என்றார். ஆம் பிரியமானவர்களே! நான் இருப்பதும் தேவ கிருபையினாலே, நீங்கள் இருப்பதும் தேவ கிருபையினாலே சத்தியத்தை அறியவும், நேசிக்கவும், அதற்குக் கீழ்படியவும் செய்வது தேவ கிருபைதான்! இந்த தேவ கிருபையானது யாவருக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இனி கிருபை என்றால் என்ன? என்று பார்ப்போம். இதன் மூல கிரேக்க வார்த்தை உபகாரம், ஈவு, கிருபை என்று புதிய ஏற்பாட்டில் மொழி பெயர்க்கப்பட்டு வந்திருக்கிறது. தகுதியற்றவனாக அபாத்திரவானாக இருக்கும் போதே அளிக்கப்படும் இலவச ஈவு; நாம் சம்பாதிக்காமல் நமக்கு இலவசமாக கொடுக்கப்படுவது. பொதுவாக

**சிறுமையானவர்கள் மீது அக்கறை உள்ளவன் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவன் – சங் 41:1–3**

கிருபை, மனுக்குலம் இரட்சிப்படைவதற்காக தேவன் காட்டிய உன்னதமான அன்பை வெளிப்படுத்துகிறது.

தேவன் ஆதியிலே மனிதனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்து, அவர்கள் தங்க தகுதியான இடமாக ஏதேன் தோட்டத்தை உண்டாக்கி, அங்கு அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் சிலாக்கியங்களையும் கொடுத்திருந்தார். ஆனால் ஒரே ஒரு வரையறை கட்டுப்பாட்டை வைத்தார். அதாவது தோட்டத்தின் நடுவிலிருக்கிற நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று கட்டளை கொடுத்திருந்தார். ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறினார்கள், விலக்கப்பட்ட கனியைப் புசித்தனர். தேவனுடைய கட்டளையை மீறுகிறதே பாவம் என்று வேதம் சொல்லுகிறது. “இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று.” **(ரோமர் 5:12)**

ஒரு விதத்தில், மனிதன் தனக்கும் தேவனுக்குமிடையே இருந்த ஒப்பந்தத்தை மீறினான். ஆகவே தேவனுடைய பார்வையில் அபாத்திரவான் ஆனான். அந்த மனிதனை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் தேவன் இல்லை. மனிதன் தேவனுக்கு விரோதமாக பாவஞ் செய்திருந்தும், மனிதனுடைய மீட்புக்காக தேவன் உடனே ஒரு திட்டத்தை மனுக்குலத்திற்காக தந்தார். அவர் அப்படி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இல்லை. இருப்பினும், மனிதன் மீது கொண்டுள்ள அன்பினாலே இதை செய்ய முன் வந்தார். அவர் கிருபையே கிருபை.

இன்னும், நன்மையான எந்த ஈவும் பரத்திலிருந்து **(யாக்1:17)** வருவதாகப் பார்க்கிறோம், தேவன் அன்பாயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது மனிதனை தேவன் நேசிக்கிறார். “தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” **(யோவான் 3:16).** “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.” **(ரோமர் 5:8).** ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் “உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமையானாலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்,” **(ரோமர் 8:35–39)** என்றார்.

தம்முடைய உன்னதமான அன்பினாலே நமக்கு இந்த கிருபையை தருகிறார். இந்த கிருபை நமக்குத் தேவையா? என்று நீங்கள் கேட்கலாம். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் செய்த பாவத்தினால் பாவமும் மரணமும் உலகில் வந்தது. நன்மை தீமை அறியத்தக்க பருவம் வந்த, அல்லது கணக்கொப்புவிக்கும் பருவம் வந்த எந்த மனிதனும் தேவனுக்கெதிராக பாவம் செய்கிறவனாக இருக்கிறான். “எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்.” **(ரோமர் 3:23).** யாரும் இதற்கு விதிவிலக்கில்லை. பாவம், மனிதனை தேவனை விட்டுப் பிரிக்கிறது. மனிதன் காணாமற்போன நிலையடைகிறான். ஆகையால், இந்த பாவியான மனிதனுக்கு தேவன் தம் கிருபையை அளிக்க வேண்டியதாயிற்று. தேவன் இதை யார் மூலம் அளிக்கிறார்? என்று நீங்கள் கேட்கலாம். இந்தக் கிருபையை தம்முடைய குமாரன் மூலமாய் தருகிறார். “நியாயப்பிரமாணம் மோசே மூலமாய் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.” **(யோவான் 1:17).** “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே” **(2 கொரி 8:9).** “ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க தேவனுடைய கிருபையும், இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர் மேல் அதிகமாய் பெருகியிருக்கிறதே” **(ரோமர் 5:15).** என்றார் பவுல்.

கிறிஸ்து மூலமாக தேவன் தம் கிருபையை நமக்குத் தந்தருளியிருக்கிறார். தேவனுடைய கிருபை இலவசமாக அளிக்கப்பட்டாலும், அது மலிவானது என்று எண்ணி விடக்கூடாது. தேவன் நம்மீது வைத்த அன்பினாலே, நம்மை இரட்சிக்க தம் குமாரனை சிலுவையிலே ஒப்புக் கொடுத்தார். பாவியான நமக்காக கிறிஸ்து மரித்தார்; நம் ஆக்கினை அவர்மேல் விழுந்தது. நமக்காக அவர் தண்டிக்கப்பட்டார். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை தேவன் நமக்காகப் பாவமாக்கினார் என்று வேதம் கூறுகிறது. எவ்வளவு பெரிய சிலாக்கியம் பாருங்கள்! எத்தனை பெரிய தியாகம்! என்ன விலையேறப்பட்ட இரட்சிப்பு! தேவக்குமாரன் தன் இரத்தத்தைச் சிந்த வேண்டி இருந்தது. 'அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது' என்கிறார் பவுல்.

அன்புள்ள நண்பனே, இந்தக் கிருபை உனக்கும் அளிக்கபட்டிருக்கிறது. கிறிஸ்து இயேசு உனக்கும் எனக்கும் இரத்தம் சிந்தியிருக்கிறார்.

# இயேசுவின் புதிய ஏற்பாடு

## The New Testament of Jesus

### முன்னுரை

"வேதாகமம்" என்ற பைபிள், 66 சிறிய புத்தகங்களை உள்ளடக்கிய, இரண்டு ஏற்பாடுகளைக் கொண்ட, ஒரு புத்தகம் ஆகும்.

பழைய ஏற்பாடு : இது 39 புத்தகங்களைக் கொண்டது. இது ஆதியாகமம் முதல் மல்கியா வரை உள்ளது. இம்மாபெரும் (புத்தகம்) உடன்படிக்கை, இஸ்ரவேலர் என்ற முற்காலத்து, மக்களுக்கு கொடுக்கப்பட்டது.

பழைய ஏற்பாடு கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பரிசுத்த தெய்வீகச் சரித்திரப் புத்தகமாகும். உலகம் எப்படி படைக்கப்பட்டு, உருவானது என்ற நிகழ்ச்சியில் ஆரம்பித்து, நசரேயனாகிய இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 440 வருடங்களுக்கு முந்திய நிகழ்ச்சிகள் யாவற்றையும், தன்னுள்ளே அடக்கியுள்ள வரலாற்றுப் புத்தகமே பழைய ஏற்பாடாகும்.

புதிய ஏற்பாடு : இது 27 புத்தகங்களைக் கொண்டது. இதனைப்பற்றி பரிசுத்த ஆவியானவர் யாக்கோபு 1:25ல் இப்படி கூறுகின்றார்... ''சுயாதீனப் பிரமாணமாகிய பூரணமான பிரமாணம்".

புதிய ஏற்பாடு, மத்தேயு என்ற புத்தகத்தில் ஆரம்பித்து, வெளிப்படுத்தின தீர்க்கதரிசன புத்தகத்துடன் முற்றுப்பெறுகிறது.

பழைய ஏற்பாட்டு புத்தகத்தின் எழுத்தாளர்கள் தீர்க்கதரிசிகள் என்று அறியப்பட்டனர். இவர்கள் தீர்க்கதரிசிகள் என்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. தாங்கள் வாழ்ந்த காலத்து மக்கள் எவைகளை விசுவாசிக்க வேண்டும் என்ற அவசியத்தையும், தேவனுக்கடுத்தவைகளில் மனிதனுடைய பொறுப்புகளையும், கடமைகளையும் எடுத்துப் போதித்தனர்.

2. எதிர்கால திட்டங்களை மிகவும் துள்ளியமாய் முன்னுரைத்தனர். இதற்குக் காரணம், எதிர்காலத்தைக் குறித்து தங்களுடைய சொந்த எண்ணங்களையோ தனிப்பட்ட சுய கருத்துக்களையோ அவர்கள் கூறவில்லை. இவர்களின் மூலம் தேவனுடைய வார்த்தையானது மட்டுமே பேசப்பட்டது, அப்படியே எழுதப்பட்டும் உள்ளது.

**II பேதுரு 1:20-21**

"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமானப் பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்".

**2015ல் தேவன் செய்த எண்ணில்லாத, அதிசயமான நன்மைகளுக்கான நன்றி செலுத்துவோம் – 2 கொரி. 9:15**

வேத புத்தகம் (பைபிள்) தேவனால் அருளப்பட்டது; அப்படியே எழுதப்பட்டுமுள்ளது.

### II தீமோத்தேயு 3:16-17

"வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனம் உள்ளவைகளாயிருக்கிறது"

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், வரலாற்று நிகழ்ச்சிகளையும், ராஜாக்களையும், ராஜ்ஜியங்களைப் பற்றிய நிகழ்ச்சிகளையும், இப்படிப்பட்ட அநேக காரியங்களையும் பேசினார்கள்.

புதிய ஏற்பாட்டைப் பற்றி நீங்கள் அறிய வேண்டியது, இந்த தீர்க்கதரிசிகள் பயன்படுத்திய 3 இன்றியமையாத பாடங்கள் உள்ளது. புதிய ஏற்பாட்டு பாடங்களை படிக்கும் நீங்கள், மிகவும் அவசரமாய் அறியவேண்டியவைகள் என்னவெனில்:

1. மேசியாவின் செய்திகள்.
2. மேசியாவின் இராஜ்யத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்.
3. புதிய உடன்படிக்கைக்கு, அல்லது புதிய ஏற்பாட்டிற்கான வாக்குத்தத்தம்.

மேசியா என்ற நசரேயனாகிய இயேசுவின் வருகையைப்பற்றி, பழைய ஏற்பாட்டில் 300 முறை தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்டுள்ளது.

இயேசுவின் பிறப்பிற்கு சுமார் 725 ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயா என்னும் தீர்க்கதரிசி, அவர் கன்னியின் வயிற்றில் பிறப்பார் என்று முன்னுரைத்திருக்கின்றார்.

### ஏசாயா 7:14

"ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு, ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" என்றார்.

கன்னிப்பிறப்பு என்பது, உயிரியல் கூற்றுப்படி சாத்தியமற்றது; ஆனால் இயேசுவின் பிறப்பு என்பது தேவனிடத்திலிருந்து வந்த ஓர் அடையாளம்.

மரியாள் கன்னிகையாய் இருந்தபோதும், பரிசுத்த ஆவியாகிய தேவன் அற்புதவிதமான படைப்பாக பிள்ளையைப் பெறும் வல்லமையை அவளுக்கு கொடுத்தார்.

### லூக்கா 1: 34-35

"அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி, இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்திரமாக, பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்."

மேசியாவினுடைய இராஜ்யத்தைக் குறித்து ஏசாயா முன்னுரைத்துள்ளது என்னவெனில்...

### ஏசாயா 2:2-4

"கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்குள் ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும், அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை"

"கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" என்பது தீர்க்கதரிசன நடையாய்; வரப்போகின்ற தேவனுடைய தேசமாகிய அவருடைய இராஜ்யத்தைப் பற்றி பேசப்பட்டுள்ளது. இந்த இராஜ்யத்திற்குள் பூமியிலுள்ள அனைத்து மக்களும், மொழி, நிறம், ஜாதி இவைகளுக்கு அப்பாற்பட்டு, சகோதரத்துவத்துடன், சமாதானத்துடன் ஒன்றிணைய வருவார்கள். ஏசாயா பேசியபடி நாம் இந்த கடைசி நாட்களில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளரான எபிரெய புத்தக ஆசிரியர் தற்காலத்தைப் பற்றி கூறுகையில்,

**கடவுளுக்கு நன்றி செலுத்தும்படி, அவர் செயல்களை ஜனங்களுக்கு அறிவிப்போம் – ஏசாயா 12:4**

### எபிரெயர் 1:1-2

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்"

இந்த புதிய ஏற்பாட்டைக் குறித்து எரேமியா தீர்க்கதரிசி முன்னுரைத்திருப்பதாவது,

### எரேமியா 31:31-32

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவ ரக்ை கப்பிடித்தந ாளிலேஅ வர்களோடேப ண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே, என்று கர்த்தர் சொல்லுகிறார்."

மேற்கூறப்பட்ட அடிப்படைக் காரியங்களை தெரிந்ததின் மூலம், இப்பொழுது புதிய ஏற்பாட்டை மிகச்சிறிய அளவில் ஆராய்வதற்கு நீங்கள் ஆயத்தப்பட்டுள்ளீர்கள். இந்த புதிய ஏற்பாடுதான், பரலோக கடவுளின் கடைசி (உயில்) உடன்படிக்கையாகும். இந்த புதிய ஏற்பாடுதான் இயேசுவின் சர்வலோகத்திற்கான உண்மைச் சமாதானம், விசுவாசம், ஒழுக்கம், நீதிநெறி ஆகிய இவைகளுக்கு சரியான வழிக்காட்டிப் புத்தகமாகும்.

### கேள்விகள்:

(பதில்களை எழுதி உடனே அனுப்புங்கள். சிறப்பு பரிசு காத்திருக்கிறது)

1. புதிய ஏற்பாட்டின் முதல் 4 புத்தகங்கள், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையும், அவரின் போதனைகளையும் நமக்கு கூறுகின்றன. அவைகளின் பெயர் என்ன?

அ. ..................................................................

ஆ. ..................................................................

இ. ..................................................................

ஈ. ..................................................................

2. இயேசு எங்கு பிறந்தார்? **(லூக்கா 2:1-14)** ........................ அவர் எங்கு வளர்ந்தார்? **(லூக்கா 2:39,40,51,53)** ........................................... 30தாவது வயது வரை அவர் என்ன தொழில் செய்தார்? (மாற்கு 6:1-3).............................................

3. இயேசு கிறிஸ்துவுக்கு திருமுழுக்கு கொடுத்தது யார்? **(மத்தேயு 3:13,17)** .................................. எந்த நதியில் ஸ்நானம் பெற்றார்? **(மாற்கு 1,9,10)** ..........................................................

4. இயேசு கிறிஸ்து திருமுழுக்குப் பெற்றபின் எத்தனை நாட்கள் உபவாசமிருந்தார்? **(மத்தேயு 4:1,10)** ........................, .........................ம் ..........................ம்

5. இயேசு கிறிஸ்துவின் தனிநபர் ஊழிய காலமாகிய 31/2 ஆண்டுகள் அவர் போதித்த போதனைகளில், மிகப் பெரிய நோக்கம் எதைப்பற்றியதாய் இருந்தது? **(மத்தேயு 4 :17: மாற்கு 1:14,15)** ....................................

..................................................................

..................................................................

6. இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின்பு இராஜ்ஜியத்தைக் குறித்து ஜெபிக்கும்படியாக தன் (அப்போஸ்தலர்களிடம்) சீடர்களிடம், என்ன கூறினார்? **(மத்தேயு 6:9,13)** ..............................................

7. இயேசு தம்முடைய அப்போஸ்தலில் சிலருக்கு கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? (மாற்கு 9:1)

..................................................................

8. சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்பட இருக்கின்ற தன் இராஜ்ஜியத்தை பற்றிய நற்செய்தியை இயேசு பிரசங்கித்ததோடு எங்கும் சுற்றித்திரிந்து என்ன செய்தார்? **(அப்போஸ்தலர் 10:38: யோவான் 11 :17,44)**

..................................................................

..................................................................

9. இயேசுவை யூதமத மூப்பரும், பிரதான ஆசாரியர்களும் ரோம ஆளுனரிடம் சிலுவையில் அறையும்படி ஏன் ஒப்புக்கொடுத்தனர்?

**நீதிமான் ஏழைகளை கவனித்து அறிகிறான் – நீதிமொழிகள் 29:7**

(மத்தேயு 27:1–20: மாற்கு 15:16–20) ..........................

..................................................................................

..................................................................................

10. மத்தேயு 26:28 ன்படி இயேசுவின் இரத்தம் .............................. உண்டாகும் படி சிந்தப்படுகிற புது ............................................ குரியது.

11. இயேசுகிறிஸ்து வெள்ளிக்கிழமை சிலுவையில் அறையப்பட்ட பின்பு, எந்த நாள் அவர் உயிர்த்தெழுந்தார்? (1 கொரிந்தியர் 15:1–4: மாற்கு 16:9) ............................................................................

12. இயேசு உயிர்த்தெழுந்த பிறகு எத்தனை நாட்கள் உயிருடன் பூமியிலிருந்தார்? (அப்போஸ்தலர் 1:1–3)

..................................................................................

13. பரலோகத்திற்கு ஏறிப்போகும் முன்பு இயேசு தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னது என்ன? (மாற்கு 16:15–16) ..................................................................

14. இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதல் ஆகிய இவைகளை பெந்தேகோஸ்தே நாளில், எந்த அப்போஸ்தலர், மற்ற எத்தனை பேருடன் எழுந்து நின்று பிரசங்கித்தார்? (அப். 2 :1, 14,22–24)

.................................................................

15. பரலோகத்திற்கு திரும்பிப்போன இயேசு எந்த அதிகாரத்திற்குரிய ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார்? (அப். 2:29,35, வெளி. 1:5) ..........................................

..................................................................................

..................................................................................

16. பெந்தேகோஸ்தே நாளில் இயேசுவைக் குறித்து பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்களில் எத்தனை பேர் அதை ஏற்றுக் கொண்டு திருமுழுக்குப் பெற்றனர்? (அப்போஸ்தலர் 2 :36–47) .......................

..................................................................................

17. பெந்தேகோஸ்தே நாளில் எருசலேமில் கிறிஸ்துவின் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, சமாரியாவில் பிலிப்பு பிரசங்கித்த இரண்டு காரியங்கள் என்ன? (அப். 8:12:19:20, 28–30,31: கொலே. 1 :13: வெளி. 1:9)

அ.................................... ஆ. ...................................

18. கிறிஸ்துவினுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து உலகெமங்கும் பிரசங்கிக்கப்படும்பொழுது, அவருடைய மக்கள் என்னவென்று அழைக்கப்படுவார்கள்? (அப். 11:26: 26:28)

..................................................................................

..................................................................

19. எல்லா மனுஷரையும் பற்றி தேவ வசனம் என்ன சொல்லுகிறது? (ரோமர் 3 :23) ....................................

..................................................................................

20. எல்லா மனுஷரும் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு சொன்னார்? (லூக்கா 13:15,18: அப். 26:20) ............................................. ஏன்? (அப். 17:16,31: எபி.9 :27) ...............................................................

21. மனந்திரும்பாத துன்மார்க்க ஆணுக்கும் பெண்ணுக்கும் என்ன நேரிடும்? (வெளி. 21:8: மத்தேயு 25:31,46) ................................... ...........................

22. இயேசு தன்னுடைய இரண்டாம் வருகையில் என்ன செய்வார்? (யோவான் 5:28,29) .......................

..................................................................................

23. கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பு நாம் ஏன் வெளிப்பட வேண்டும்? (எபி. 9:27: 2கொரி 15:23–26)

..................................................................................

..................................................................................

24. மரித்த எல்லோரையும் அவர் உயிர்த்தெழவைத்த பின்பு, கிறிஸ்து தன்னுடைய இராஜ்ஜியத்தை என்ன செய்வார் ? (1 கொரி 15:23–26) ..................................

..................................................................................

25. புதிய ஏற்பாட்டின் கடைசியும், வேதாகமத்தின் (பைபிள்) கடைசியுமான புத்தகம் வெளிப்படுத்தின விசேஷமாகும். இதில் மனிதன் செய்யக்கூடாது என்று சொல்லுகிற இரண்டு காரியங்கள் என்ன? (வெளி. 22:18,19)

அ.................................... ஆ. ...................................

தமிழில் PCPR

தனி நபர் வேத ஆராய்ச்சியில், வேதாகமம் முழுவதையும் தியானம் செய்ய உதவும் தொடர் பாடங்கள்

# தொடர் 8 2 சாமுவேல் : தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதர்

**வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:**

**2 சாமு 1–7, 9–20, 23, 24.**

**தலைப்பு:**

2 சாமுவேல் என்ற இப்புத்தகத்தில் சாமுவேல் காணப்படாத போதிலும், தொடக்கத்தில் 1 மற்றும் 2 சாமுவேல் புத்தகங்கள் ஒரே புத்தகமாய் இருந்ததால், இது அவரது பெயரைத் தாங்கியுள்ளது (1 சாமுவேல் புத்தகம் பற்றிய குறிப்புகளில் காணவும்).

**பின்னணி**

2 சாமுவேல் புத்தகம் தாவீதின் ஆட்சியைப் பற்றியதாக உள்ளது. தாவீது நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தார். ஆனால், இவற்றில் முப்பத்து மூன்று ஆண்டுகள் மாத்திரமே சமஸ்த இஸ்ரவேல் மீதும் ஆட்சி செய்தார்; முதல் ஏழு ஆண்டுகளும் ஆறுமாதங்களும் அவர் யூதாவின் மீது மாத்திரம் ஆட்சி செய்தார் (5:4,5). இந்த பிரிவினையானது சாலொமோனுடைய மரணத்திற்குப் பின்பு, நாடு பிரிந்த ராஜ்யமாக உடைபடும் வரையிலும் தொடர்ந்து நிலவிவந்தது.

தாவீதின் ஆளுகையானது, நிறைவாக மற்ற எல்லா ஆளுகைகளும் அளக்கப்படுவதற்கான அளவு தொகையாயிற்று (**1 இராஜாக்கள் 15:3** முதலியன). எருசலேமில் தலைநகரத்தை நிலைநாட்டுதல் என்பது தாவீதின் சாதனைகளில் ஒன்றாக இருந்தது (**5:6–10**); அந்த நகரம் பெரும்பான்மையான இஸ்ரவேல் மக்களின் சிந்தைகளில் அவர்களின் தேவபக்திக்கு / மதத்திற்கு மையமாயிற்று.

வேதாகமம் மனிதர்களிடத்தில் இருந்தல்ல, ஆனால் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது என்பதற்கு, அதன் மாபெரும் பாத்திரங்கள் பற்றிய அதன் திறந்த தன்மை ஒரு ஆதாரமாக உள்ளது. தாவீதின் பாவங்கள் மூடி மறைக்கப்பட்டு இருப்பதில்லை. தாவீது பூரணமானவர் என்பதால் அல்ல, ஆனால் அவர் மனந்திரும்பி தேவனிடம் திரும்ப மனவிருப்பம் கொண்டிருந்ததாலேயே அவர், “தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராக” இருந்தார் (சங்கீதம் 32 மற்றும் 51 ஆகியவற்றைக் காணவும்).

நாத்தான் மற்றும் காத் என்பவர்கள் இப்புத்தகத்தை எழுதியிருக்கச் சாத்தியக் கூறுள்ளது (1 சாமுவேல் புத்தகத்திற்கான குறிப்புகளில் காணவும்).

**வரைகுறிப்பு**

I. **தாவீதின் புகழ்** (1–10).

அ. சவுலின் மரணம் குறித்துத் தாவீதின் புலம்பல் **(1)**

ஆ. தாவீது யூதாவின் மீது மாத்திரம் அரசராக ஏற்படுத்தப்படுதல் **(2:1 –11)**

இ. உள்நாட்டு யுத்தத்தின் காலம் **(2:12 –4:12)**

ஈ. தாவீது சமஸ்த இஸ்ரவேல் மீதும் அரசராக ஏற்படுத்தப்படுதல்; அவர் அற்புதமான வகையில் ஆட்சி செய்கிறார் **(5,6)**

உ. என்றென்றைக்கும் இருக்கும் ராஜ்யம் பற்றி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை **(7)**

ஊ. தாவீதின் ஆட்சியில் உச்சக் கட்டம் **(8 –10)**

II. **தாவீதின் வெட்கக்கேடு (11–24)**

அ. தாவீது பத்சேபாளுடன் பாவம் செய்தல் **(11)**

ஆ. தாவீதின் மனந்திரும்புதல் **( 12:1–14)**

இ. பட்டயம் அவர் வீட்டை விட்டு நீங்காதிருத்தல் **(12:15–18:33)**

1. பிள்ளையின் மரணம் **(12:15–25).**
2. தாமார் கற்பழிக்கப்படுதல் **(13:1–22)**
3. அப்சலோம் அம்மோன்மீது பழிவாங்குதல் **(13:23–29).**
4. அப்சலோமின் கலகம் **(14–17)**
5. அப்சலோம் கொல்லப்படுதல் **(18).**

ஈ. தாவீதின் கடைசி நாட்கள் கலக்கம் அடைதல், ஆனாலும் வெற்றி கொள்ளுதல் **(19–24)**

**கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதீர் ! – சங்கீதம் 103:2**

1. தாவீது எருசலேமில் மீண்டும் நிலைநாட்டப்படுதல் (19).
2. மீண்டும் உள்நாட்டு யுத்தம் (20).
3. பஞ்சமும் யுத்தமும் (21)
4. நன்றி செலுத்தலின் சங்கீதம் (22)
5. தாவீதின் கடைசி வார்த்தைகள் (23)
6. ஜனத்தொகைக் கணக்கெடுத்தல் என்ற பாவமும், கொள்ளை நோயும் (24)

### சாமுவேல் புத்தகத்தில் இருந்து பாடங்கள்:

தாவீதின் வாழ்வு, பாவத்தினுடைய விளைவைப் பற்றிய கருத்து நோக்கப் பாடமாக உள்ளது. **கலாத்தியர் 6:7,8**ன் சத்தியமானது இந்த அண்டத்தின் பின்னலுக்குள் எழுதப்பட்டுள்ளது: "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணெவட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்; தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிகென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்."

ஒருவர் மனந்திரும்பி, அவரது பாவக்குற்றம் நீக்கப்பட்டாலும் கூட, பாவத்தின் விளைவு இன்னும் உள்ளது. அறுபது நிமிட நடவடிக்கையானது, அறுபது ஆண்டுகள் வாழ்வை நிர்மூலமாக்கக்கூடும். இளம் மக்களே, முதிய மக்களே பாவத்தில் இருந்து விலகியிருங்கள்! பாவம் பயங்கரமானதாக உள்ளது!

யாரேனும் ஒருவர், எப்போதும் நமக்கு மோசமான ஆலோசனைகளைக் கொடுப்பதற்கென்று இருக்கின்றார் (13:3-5).

தாவீது தமது மகனைப் பற்றி, "அது மரித்திருக்கிற இப்பொது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பி வரப்பண்ணக்கூடுமோ?" என்று கேட்கும் **12:23**ம் வசனமும், எபூசியனாகிய அர்வனாவிடத்தில் தாவீது, 'நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல்" என்று கூறும் **24:24**ம் வசனமும், சிந்தனையைத் தூண்டும் இரண்டு வசனங்களாக உள்ளன.

2 சாமுவேல் 7, வேதாகமத்தில் உள்ள மாபெரும் அதிகாரங்களில் ஒன்றாகும்; அதில் நாம் தாவீதுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையானது, ஒரு பகுதி சாலொமோன் மற்றும் யூதாவின் அரசர்களில் நிறைவேறிற்று **(1 நாளாகமம் 22:6-10; 28:3-6)**, ஆனால் இது இயேசு கிறிஸ்துவின் வருகையில் முற்றிலுமாக நிறைவேறிற்று **(எபிரெயர் 1:1-8)** என்று பார்க்கிறோம்!

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Puthuyugam TV : Every Tuesday 6 :15 a.m.***

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Tamilan TV & Radio :** TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV:** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)


**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

பாடம் 1

# நன்றி செலுத்துவோம்

சிறுவர் பகுதி

கடவுளின் செல்லப்பிள்ளைகளா! உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் எல்லாரும் நல்லாயிருக்கிறீர்களா? பதினொரு மாதம் பரலோக கடவுள் நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்திருக்கிறார். இதை நினைக்கும் போது மிகவும் சந்தோஷப்படுவீர்கள். இந்த சந்தோஷத்தோடே வேதாகமத்திலிருந்து ஒரு சம்பவத்தை தெரிஞ்சுக்கலாமா?



அன்னாள் என்னும் பெயருள்ள ஒரு அக்கா இருந்தாங்க. அவங்களுக்கு ரொம்ப நாளாக குழந்தை இல்லாமல் இருந்தது. அதனால், எல்லாரும் அவர்களை கேலி செய்தார்கள். அந்த அக்கா அவமானம் தாங்க முடியாமல், மிகவும் வேதனையோடு பரலோக தேவனை நோக்கி கண்ணீரோடு ஜெபித்தாள். கர்த்தர் அன்னாளின் ஜெபத்தை கேட்டு, அழகான ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுக்கும்படி கிருபை செய்தார். கர்த்தர் செய்த நன்மைக்கு நன்றியாக தன் குழந்தையை தேவாலயத்தில் ஆண்டவருக்கு வேலை செய்யும்படி கொடுத்தாள்.

பிள்ளைகளா! உங்களுக்கும் கர்த்தர் இந்த வருடம் அநேக நன்மைகள் செய்திருக்கிறார். அவைகளை நினைத்துப்பாருங்கள்! உங்கள் படிப்பில், பெலவீனத்தில், பயணத்தில் அவர் செய்த நன்மைகளை மற்றும் அவர் தந்த பாதுகாப்பினை நினைத்துப்பாருங்கள். இதற்கு நன்றியாக அன்னாளைப்போல என்ன செய்யப்போகிறீர்கள்? இந்த மாதம் நான் சுவிஷேசப் புத்தகங்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் படித்து முடிப்பேன்! இயேசுவைப் பற்றி 30 பேருக்கு சொல்லுவேன்! இந்த கிருபையுள்ள வார்த்தை பத்திரிக்கையை 30 பேரை படிக்க வைப்பேன்! என்று கர்த்தர் செய்த நன்மைகளுக்காக, நன்றியாக ஏதாவது செய்யுங்கள். செய்வீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்!

**மனன வசனம் : 2கொரி 9:15**

"தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்."

**– அன்பு ஏசுதாஸ். எஸ்.**

---

பாடம் 2

# நம்மை நாமே சரி செய்வோம் !

சிறுவர் பகுதி

அன்புள்ள குட்டீஸ் ! இந்த வருடத்தின் கடைசி நாட்களில் இருக்கிற நாம், தேவன் நமக்கு செய்த நன்மைகளுக்கு நன்றி சொல்வதும், மற்றும் நம்மை நாமே சரி செய்ய வேண்டியதும் மிகவும் முக்கியம். ஆகையால் நாம் நம்மை சரிசெய்ய உதவும் ஒரு பைபிள் சம்பவத்தை தெரிந்துக்கொள்வோமா?

தாவீது என்ற ராஜா இஸ்ரவேல் நாட்டை ஆண்டு வந்தார். அவர் தேவனுக்கு மிகவும் பிரியமான வாழ்க்கை வாழ்ந்தார். தேவனே தாவீதைக் குறித்து "என் இருதயத்திற்கு ஏற்றவன்" என்று சொன்னார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இப்படிப்பட்ட தாவீது ராஜா ஒரு முறை தேவனுக்கு விரோதமான பாவம் ஒன்றை செய்தார். மேலும் அந்த பாவத்தைக் குறித்து எந்த குற்ற உணர்வும் இல்லாமல், எப்பொழுதும் போல சாதாரணமாக இருந்தார். ஆகையால் தேவன் தாவீதின் பாவத்தை அவனுக்கு உணர்த்த, நாத்தான் என்ற தீர்க்கத்தரிசியை அனுப்பினார்.

நாத்தான் தீர்க்கத்தரிசி, தாவீது ராஜாவை நோக்கி: 'ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள்; ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன். ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது. தரித்திரனுக்கோ, அவன் வளர்த்த ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது; அது அவனோடும் அவன்

பிள்ளைகளோடுங் கூட இருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று (கூடவே சாப்பிட்டு) அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக் கொண்டு, அவனுக்கு ஒரு மகளைப் போல இருந்தது. அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்குச் சாப்பாடு போடும்படி, தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக் குட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான்' என்றான்.



அப்பொழுது தாவீது ராஜா, இப்படி செய்தவன் நிச்சயம் தண்டிக்கப்பட்ட வேண்டும் என்றார். அதற்கு நாத்தான் 'நீ தான் அந்த மனிதன்' என்றார். உடனே தாவீது "நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன்" என்றார். இதுமட்டுமா தன் பாவத்திற்காக தேவனிடம் மன்னிப்புக்கேட்டு, மனம் திருந்தினார். மேலும் அந்த பாவத்தை மீண்டும் அவர், பிறகு எப்பவுமே செய்யவில்லை. தேவன் அவனுக்கு வரவிருந்த தண்டனையிலிருந்து காப்பாற்றினார்.

குட்டீஸ் ! உங்களிடம் உங்கள் அப்பா, அம்மா மற்றும் உங்கள் சபை போதகர் ஆகியோர், நீங்கள் செய்த தவறை உங்களுக்கு சுட்டி காண்பித்திருந்தால், கோபப்படாமல் அந்த செயல்களை உடனே சரிசெய்யுங்கள். 'உங்களுக்கு வேற வேலையே இல்லை; என்னை எப்பவுமே குறை சொல்றீங்கனு' சொல்லாதிங்க! தாவிதை தீங்கிலிருந்து காப்பாற்றிய தேவன், உங்களையும் காப்பாராக. ஆமென்!

**மனன வசனம் : நீதிமொழிகள் 28:13**

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்."

---

பாடம் 3

# நன்றி சொல்லுவோம் !

சிறுவர் பகுதி

ஹாய் செல்லங்களா! நீங்க எல்லாரும் ரொம்ப பிஸியாக அரையாண்டு தேர்வு எழுதிக்கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். பிதாவாகிய தேவன் உங்களுக்கு ஞானத்தையும், ஞாபசக்தியையும் தருவார். ஆகையால் தைரியமாக எழுதுங்க. இந்த ஆண்டின் கடைசி மாதத்தில் இருக்கிற நாம், வேதாகமத்திலிருந்து ஆண்டவர் இயேசுவை மிகவும் சந்தோஷப்படுத்தின ஒருவரை பற்றி படிக்கலாமா?

ஆண்டவர் இயேசு ஒரு நாள் ஒரு கிராமத்தின் வழியாக எருசலேமுக்கு நடந்துப்போனார். அப்பொழுது அந்த கிராமத்தில் பத்து குஷ்டரோகிகள் இருந்தனர். குஷ்டரோகம் என்பது ஒரு கொடுமையான நோய். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, 'ஐயரே, எங்களை குணமாக்கும்' என்று வேண்டினார்கள். ஆண்டவர், அந்த பத்து பேரையும் பார்த்து, நீங்கள் போய் உங்களை ஆசாரியனுக்கு காண்பியுங்கள் என்று சொன்னார். அப்படி போகும்போது அந்த பத்து பேரும் அற்புதமாக குணமானார்கள். ஆனால் குணமாகின பத்து பேரில் ஒரே ஒருத்தர் மட்டும் இயேசுவிடம் ஓடி வந்து, இயேசுவின் பாதத்திலே விழுந்து, அவருக்கு நன்றி சொன்னான். இயேசுவுக்கு அது மிகவும் சந்தோஷத்தை கொடுத்தது.

செல்லங்களா! அதேப்போல நாமும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வேலைக்கு பின்னும் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இந்த வருடம் முழுவதும் நம் ஒவ்வொருவரையும் மிகவும் பத்திரமாக பாதுகாத்தார். நமக்கு குடிக்க தண்ணீர், சாப்பிட உணவு, உடுத்த

உடை, படிக்க ஞானம் மற்றும் சுவாசிக்க காற்று என சொல்லிக்கொண்டே போகலாம்... ஒவ்வொன்றிற்காகவும் ஒவ்வொரு முறையும் நாம் தேவனுக்கு நன்றி சொல்லுவோம். தேவனை சந்தோஷப்படுத்துவோம். அவர்



நிச்சயம் நமக்கு புத்தாண்டை சந்தோஷமாக்கி தருவார்.

**மனன வசனம் : 1 தெச 5:18**

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது."

உங்கள் அக்கா
**பிரியா ஆண்டனி**


பாடம் **4**

# தற்பரிசோதனை

சிறுவர் பகுதி

குட்டீஸ் ! புது வருஷத்தை சந்தோஷமாய் வரவேற்க தயார் தானே? அதனால் இந்த வருஷத்திலே நாம என்னென்ன செய்தோம் என்று, நம்மை நாமே தற்பரிசோதனை செய்து, நம்மை நாமே சரிபண்ணலாமா ?

ஒரு அப்பாவிற்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். அதில் இளைய மகன் அப்பா சொல்பேச்சை கேட்காமல், சண்டை போட்டு தன் சொத்தை பிரித்து வாங்கிக்கொண்டு போய், தன் நண்பர்களோடு சேர்ந்து பணத்தையெல்லாம் தவறான வழியில் செலவழித்துப் போட்டான். அவனுடைய பணமெல்லாம் தீர்ந்துப்போனதென்று அவன் நண்பர்கள் கண்டுபிடித்தவுடன், அவர்களெல்லாரும் அவனைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். அந்த அண்ணனோ சாப்பிடுவதற்கு பணமில்லாமல், ஒரு பிச்சைக்காரனைப் போல அலைந்துக் கொண்டிருந்தான். ஒருவரும் அவனுக்கு சாப்பாடு கொடுக்கவில்லை. பன்றியின் தவிட்டை பசி தாங்காமல் தின்றான். அதுவும் அவனிடம் இருந்து பிடுங்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டான்.



அப்பொழுது தான் அந்த அண்ணனுக்கு, தன் தகப்பனுடைய ஞாபகமும், புத்தியும் வந்தது. அதனால் வேகமாக அப்பாவிடம் போய்: 'அப்பா! நீங்க சொன்னதை நான் கேட்காமல், தேவனுக்கும் பயப்படாமல் என் இஷ்டத்திற்கு வாழ்ந்து, தப்பான வழிகளில் பணத்தையெல்லாம் செலவழித்துவிட்டேன். நான் உங்களுக்கும், தேவனுக்கும் விரோதமாக பாவம் செய்துவிட்டேன் என்று அழுது மன்னிப்புக்கேட்டான். அவனுடைய அப்பா அவன் செய்த பாவத்தை அவனுக்கு மன்னித்து, தன் வேலைக்காரரை அழைத்து அவனுக்கு புது ஆடை, நகை, செருப்பு எல்லாம் போட்டுவிடச் சொன்னார். மேலும் அந்த அண்ணனுக்கு சிறப்பான விருந்தையும் ஏற்பாடு செய்தார்.

குட்டீஸ் ! நாமும் இந்த வருஷம், தினமும் பைபிள் படிப்பேன், ஜெபம் பண்ணுவேன், இயேசுவை பற்றி யாருக்காவது சொல்லுவேன்னு முடிவெடுத்துவிட்டு, எத்தனை முறை செய்யாம இருந்திருக்கோம்? தேவனிடம் ஜெபம் செய்து, மன்னிப்புக்கேட்டு, இனிமேல் தினமும் ஒழுங்காக பைபிள் படிப்போம், ஜெபம் பண்ணுவோம், தினமும் இயேசுவை பற்றி யாருக்காவது சொல்வோம் என்று உடனடியாக முடிவு செய்வோம்! அந்த அண்ணனுக்கு அவர் அப்பா சிறப்பானவைகளை கொடுத்ததைப் போல், நம்முடைய அப்பாவாகிய பரலோக தேவனும் உங்களுக்கு சிறப்பான ஆசீர்வாதங்களைக் கொடுப்பார்.

**மனன வசனம் : கலா – 6:4**

"அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப்பார்க்கக்கடவன்..."

**– குயினி பிலேமோன்**

# இம்மாதக் கேள்விகள் ?

1. ''கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தம்" என்ன?
2. "உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை" யார் மூலம் யாருக்கு செலுத்த வேண்டும்?
3. உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது ஏன்?
4. எதற்காக இயேசு 'மற்ற ஒன்பது பேர் எங்கே?' என கேட்டார்?
5. தாவீது தன் ஆத்துமாவிடம் எதை "மறவாதே" என்கிறார்?
6. தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் எதை அறுப்பான்?
7. தாவீது எந்த வகையில் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகனபலி செலுத்த மாட்டேன் என்றார்?
8. மிகுந்த ஆதாயம் தரும் தேவபக்தி எது?
9. 'மனரம்மியமாயிருக்க கற்றுக்கொண்டேன்' என்றவர் யார்?
10. தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால் பிதா என்ன செய்வார்?

## சிறுவர்க்கான கேள்விகள்

1. அன்னாள் தேவனுக்கு எவ்வாறு நன்றி செலுத்தினாள்?
2. தாவீது ராஜா யாருக்கு விரோதமாக பாவம் செய்தார்?
3. தாவீது செய்த பாவத்தை அவருக்கு உணர்த்திய தீர்க்கதரிசி யார்?
4. பாவத்தை உணர்ந்த தாவீது என்ன செய்தார்?
5. குணமாகின 10 குஷ்டரோகிகளில் எத்தனை பேர் நன்றி சொன்னார்கள்?
6. இளைய மகன் திருந்திய போது என்ன செய்தான்?
7. உன்னை காத்திட்ட தேவனுக்கு நீ என்ன செய்ய போகிறாய்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-01-2016**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
**45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,**
**அரசரடி, மதுரை - 625 016**
**செல்: 92 4421 4421, 92 4431 4431**

## சென்ற மாத பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. யாத் 20:2 | 2. ஏசா 42 : 8 | 3. 1 யோவா 5 : 21 |
| 4. வெளி 21 : 8 | 5. 1 கொரி 10 : 20 | 6. ரோம 1 : 21 |
| 7. ஓசியா 2 : 17 | 8. சங் 16 : 4 | |
| 9. யாத் 34 : 13 | 10. ரோம 1 : 25 | |

## நவம்பர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
2. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
3. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
4. R. பால் ஜெயராஜ் – சென்னை
5. Mrs. தேவி ராஜாசிங் – திருப்பூர்
6. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
7. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
8. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
9. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
10. J. ஜோசப் – தூத்துக்குடி
11. Mrs. B. ஜாய்ஸ் ஜோசுவா – தூத்துக்குடி
12. Mrs.R. ஞான சிரோன்மணி – சமயநல்லூர்
13. Mrs.J. ரேச்சல் தமிழரசி – மதுரை
14. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
15. S. ஜெயராஜ் – பொள்ளாச்சி
16. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
17. Mrs. பீயுலா ஜேசுராஜன் – புதுச்சேரி
18. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
19. Mrs. ஹேலன் திலக் – மதுரை
20. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
21. Mrs. ஈஸ்வரி – கரூர்
22. K. மோகன் – கொமாரபாளையம்
23. Mrs. சரிதா லாரன்ஸ் கோபி – வேப்பங்கனேரி
24. M. லாரன்ஸ் கோபி – வேப்பங்கனேரி
25. Mrs. பூங்குயில் தமிழ்ச்செல்வி – பழனி
26. Mrs. தேவி ராஜாசிங் – திருப்பூர்
27. G. புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
28. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
29. Mrs. குளோரி பால்ராஜ் – தஞ்சை
30. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
31. P. ஜெயராஜ் செல்வி – நாமக்கல்
32. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
33. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
34. Mr. வின்செண்ட் ஜோசப் – மேலூர்
35. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
36. S. விஜயசந்திரா – கோவை
37. M.C. ஜேம்ஸ் – நாகர்கோவில்
38. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
39. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
40. Mrs.A. சந்திரா – மதுரை

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. G. பிரசன்னா பிளஸ்ஸி – வேப்பங்கனேரி
2. A. கெனித்சாம் பெஞ்சமின் – மதுரை
3. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# தஞ்சாவூரில் நடைபெற்ற பார்வையற்றோருக்கான வேதாகம முகாம்



ஆசிரியர் செய்தி அளித்த போது...



சுமார் 100 பார்வையற்றோர் பங்கு பெற்றனர்




ப்ரெயில் பைபிள் பாடங்கள், பத்திரிக்கை வழங்கப்பட்டது



சிறப்புப் பரிசை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட பார்வையற்றோர்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜெபிப்போம் ! உதவி செய்வோம் !









அன்பு வாசகர்களே ! சமீபத்திய மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வேதனைகள் போக்கவும், வாழ்வாதார தேவைகள் சந்திக்கப்படவும், தேவனுடைய அளவில்லாத ஆச்சரியமான கிருபைகளை பெற்ற நாம், ஜெபிப்போம்! மேலும் நாம் ஒவ்வொருவரும் நேரில் சென்று, அவர்களின் தேவை அறிந்து, உதவி செய்வோம். (மத். 25:34-40)

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th December 2015

## தபால் வழி பைபிள் பாடங்கள்






அடிப்படை (Basic) மற்றும்
முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில்
படித்து, அழகிய சான்றிதழும்
(Certificate) முழு பைபிளையும்
பரிசாக பெறுங்கள்!



## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்







அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!


உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :
**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us facebook NT Gospel Restorers